# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,409 — 1924 ம் ௵ ஆவணி ௴ 8 ந் திகதி வெள்ளிக்கிழமை.

## Part IV.—நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் அனுராசபுரத்து நகரக்குளங்களின் கீழுள்ள நூதனசாலை நீர்ப்பாய்ச்சல் வாய்க்காலின் மாட்க்கத்தை மாற்றுதல் என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 14. குறிச்சி—அனுராசபுரம்.

T. S. P. P. No. 14. Extract 1.

| துண்டு. | காணியின் பெயர். | | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|---|
| 196c | — | .. | 30 வயதுள்ள ஐந்து தென்னைகளும் 10 வயதுள்ள நாலு கமுகுகளுமுள்ள வளவு | காலஞ்சென்ற மொறக்காவை றட்டமகாத்மையா குறுலுவி னுரிமைக்காறர் | 0 | 0 | 5 18 |
| 196D | — | .. | வளவு .. .. | காலஞ்சென்ற எம். காதர்மீதினி னுரிமைக்காறர் | 0 | 0 | 0 55 |
| 197 | — | .. | நீர்வாய்க்கால் .. .. | காலஞ்சென்ற மொறக்காவை றட்டமகாத்மையா குறுலுவி னுரிமைக்காறர் | 0 | 0 | 2·34 |
| 198 | — | .. | ஷை .. .. | காலஞ்சென்ற எம். காதர்மீதினி னுரிமைக்காறர் | 0 | 0 | 0·48 |

T. S. P. P. No. 14. Extract 2.

| துண்டு. | காணியின் பெயர். | | விவரம். | உரித்தாளியின் பெயர். | ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|---|
| 196E | — | .. | 30 வயதுள்ள ஒரு தென்னையுள்ள வளவு | காலஞ்சென்ற எம். காதர்மீதினி னுரிமைக்காறர் | 0 | 0 | 1·50 |
| 200 | — | .. | நீர்வாய்க்கால் .. .. | ஷை .. .. | 0 | 0 | 0·95 |
| $196\frac{1}{3}$A | — | .. | 25 வயதுள்ள ஒரு தென்னையுள்ள தோட்ட நிலம் | முடிக்குரியது காலஞ்சென்ற எம். காதர் மீதினி னுரிமைக்காறராற் சேர்த்தடைக்கப்பட்டது | 0 | 0 | 0·10 |
| $196\frac{1}{4}$A | — | .. | வெளிநிலம் .. .. | ஷை .. .. | 0 | 0 | 0·21 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1924 ம் ௵ செப்டம்பர் மாசம் முதலாந் தேதியிலன்று 2 மணிக்கு அனுராசபுரக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்தகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

அனுராசபுரக் கச்சேரி,
1924 ம் ௵ ஆகஸ்ட் ௴ 2 ௳.

என். முணசிங்க,
வடமத்திய மாகாண அரசாட்சி ஏசண்டுக்காக.

1876 ம் ஹு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் உயன்வத்தை மகமதிய பாடசாலை என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 3,374. குறிச்சி—உயன்வத்தை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | பள்ளியேவத்தை | .. தோட்டம் | .. உயன்வத்தை அதிராகி மன்லெவ்வை | .. 1 0 5 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1924 ம் ஹு புரட்டாதி மாசம் 4 ங் தேதியிலன்று காலை 10 மணிக்கு மாவனெல்லையில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கேகாலைக் கச்சேரி,
1924 ம் ஹு ஆவணிமீ 2 ங் வ.

ஜே. ஆர். வோல்ற்றர்ஸ்,
உதவி அரசாட்சி ஏசெண்டு.

---

1876 ம் ஹு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் அல்கம பெண் பாடசாலை என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 3,373. குறிச்சி—அல்கம மெதகம.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | உதுவானகேனே | .. தோட்டம் | .. டபுள்யூ. ஸானிசாவுக்கும் மறுபேருக்கும் | .. 1 0 24·2 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ் செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1924 ம் ஹு புரட்டாதி மாசம் 8 ங் தேதியிலன்று 3 மணிக்கு அம்பேபுசை வாடிவீட்டில் என் முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம்சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கேகாலைக் கச்சேரி,
1924 ம் ஹு ஆவணிமீ 5 ங் வ.

ஜே. ஆர். வோல்ற்றர்ஸ்,
உதவி அரசாட்சி ஏசெண்டு.

---

## உரிமைபெறும் பாழ்நிலத்தின் முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

[அறிவித்தல் இலக்கம் 8,653, கேகாலை.]

### 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் வெண்நிலங்களைப்பற்றிய அறிவித்தல்.

இதிலே பின்னர்ச் சொல்லப்படும் காணிகளிலே ஏதும் உடந்தை யுள்ளவர்களென உரித்துப்பேசுபவர்கள் யாருமுண்டானால் அவர்கள், 1924 ம் ஹு (ஓகஸ்ட்) ஆவணிமீ 8 ங் தேதியிலிருந்து மூன்று மாசத்துள்ளே கேகாலைக் கச்சேரியில் கேகாலை டிஸ்திறிக் உதவி அரசாட்சி ஏசென்று அவர்கள் முகதாவிற் தெரிபட்டு சொல்லப்பட்ட காணி அல்லது காணிகளுக்கு அல்லது அதிலே யாதும் உடந்தைக்கு உரித்துண்டெனச் சாதித்தாலன்றி, சொல்லப்பட்ட காணிகள் அல்லது எக்காணியாயினும் சொல்லப்பட்ட உதவி அரசாட்சி ஏசென்று அவர்களுக்கு 1897 ம் ஆண்டின் 1 ம் இலக்க சட்டத்தினால் கொடுக்கப்பட்டிருக்கும் தத்துவங்களின் பிரகாரம் உரித்துப்பேசப்படாததாகிய குறித்த காணிகள் முடிக்குரியதென அவர்களுடைய கையொப்பத்தோடு எழுத்திலே வெளிப்படுத்துவார்கள் என்பதை அறிந்துகொள்க.

ஜே. ஆர். வோல்றர்ஸ்,
உதவி அரசாட்சி ஏசென்று.

குறிப்பு—குறித்த காணிகளைவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணி அல்லது காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

சொல்லப்பட்ட காணிகளின் விபரம்.

சப்பிரகாம மாகாணம் கேகாலை டிஸ்திறிக் பெலிக்கால் கோறளைப் பகுதி கண்டுப்பித்தை வடக்கு பெகறம்பைக் கிராமத்திலுள்ள இதன்கீழ் விபரிக்கப்பட்ட பின்னால் காணும் துண்டுகள் :—

பிரதமபடம் இலக்கம் 2,713.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|
| 1 .. | குதுமேரியைகேனே .. .. .. | .. 11 2 23 |
| 1A .. | ஷை யும் கின்பெண்டலகேனேயும் (ரேட்டோடுகூடிய நிலமும்) | .. 0 2 34 |

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 2 .. | இன்பென்டலகேனே .. .. .. .. | 2 1 33 |
| 3 .. | குதுமேரியைகேனேயும் இன்பென்டலகேனேயும் .. .. .. | 0 0 16 |
| | | 14 3 26 |

எல்லைகளாவன: வடக்கு-உரிமைப்படம் 343,757 ம் ரஙகிராவுக்கும் மறுபேருக்குமுரிய ஆர்தாவலவத்தையும்; கிழக்கு-டிங்கிரி பண்டாவுக்குரிய பான்சாலவத்தையும், டிங்கிரி பண்டாவுக்குரிய பான்சாலவத்தைகேனேயும், ரேட்டும், டிங்கிரி பண்டாவுக்கும் மறுபேருக்கு முரிய இன்பென்டலகும்புறவும், மலஎலாவும்; தெற்கு-உரிமைப்படம் 289,402 ம் முடிக்கு விடப்பட்ட கீன்பென்டலமூககிளானே அல்லது வெலிமதுவமூக்கிளானே; மேற்கு-ரேட்டும் (முடிக்கு விடப்பட்ட) குதுமேரியைமூக்கிளானே, உரிமைப்படம் 343,757 ம்.

இந்தக்காணிகளைப்பற்றிய மறுவிபரங்கள் கேகாலை உதவி ஏசண்டர் அவர்களிடமிருந்தும் படங்களைப்பற்றி அளவு கந்தோர் தலைவரிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

---

## கேள்விப்பத்திரங்களைப்பற்றிய அறிவித்தல்.

நாச்சிக்களி உப்பு முதற்பெயருக்கு ஓர் புதுவீடு கட்டும் வேலை ஒப்பந்தத்திற் கொடுகைப்படும்.

2 இவ் வொப்பந்தத்தைக் கேட்க விரும்புவோர் தமது கேள்விப்பத்திரத்தை ஓர் முத்திரித்த உறையிலிட்டு அதன் இடதுமூலையில் "நாச்சிக்களி உப்பு முதற்பெயருக்கு ஓர் புதிய வீடுகட்டும் ஒப்பந்தகேள்வி" என்றெழுதி புத்தளம் உதவி ஏசன்றவர்கட்கு இம்மாதம் 19 ந் திகதி பிற்பகல் 1 மணிக்குமுந்திக் கிடைக்கத்தக்கதாக வனுப்பவேண்டும்.

3. தனது கேள்விப்பத்திரத்தை யனுப்பமுந்திக் கேள்விக்காறன் எந்தக் கச்சேரியிலாவது ஒரு கச்சேரியில் முற்பணமாகப் பத்து ரூபாய் கட்டிப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டைக் கேள்விப்பத்திரத்தோடனைக்கவேண்டும்.

4. கேள்விக்காரன் தனது கேள்வி யேற்றுக்கொள்ளப்படுங் காலத்தில் தான் குறித்த வேலையைக் கிரமமாக முடித்துப்போடுவதாக ஞாயமான காலத்துள் ஓர் உடன்படிக்கை பண்ணிக்கொள்ள வேண்டும் அப்படிச்செய்யத் தவறினல் கட்டிய முற்பணம் பறிமுதலாக்கப்படும்.

5. கேள்விக்காறன் தனக்குக் காயிதங்கள் கிடைக்கத் தக்கதாகப் புத்தளத்தில் ஓர் விலாசத்தைக் குறிககவேண்டும்.

6. உடன்படிக்கை பண்ணிக்கொண்டபின் நாலு கிழமைக்குள் வேலையை முடித்துப்போட வேண்டும்.

7. இன்னும் வேண்டிய விபரங்களைப் புத்தளம் உப்புசுப்பிறீந்தண்டனிடமிருந்து பெற்றுக்கொள்ளவும்.

### செய்யவேண்டிய வேலையின் விபரம்

புதிதாய்க் கட்டப்படும் வீடு 13 அடி நீளம் 13 அடி அகலமுள்ள இரண்டு அறைகளும் ஒரு சாலையுமுள்ளதா யிருக்க வேண்டும். சுற்றிவர 6 அடி அகலமுள்ள விறுந்தையும் முன்விறுந்தைககு ஓர் போட்டிக்கோவு மிருககவேண்டும் சுவர்கள் தடிகள் குறுக்குமறுக்காய் வைதது களிமண்ணுல் மூடி அழுத்தப்பட்டும் $8\frac{1}{2}$ அடி உயரமாயு மிருக்கவேண்டும். வீடு கிடுகால் வேயப்பட வேண்டும். பழைய கட்டிடத்தின் பழுதுபடாத மரந்தடிகளால் ஒரு கக்கூசுகட்டி கிடுகால் மேயவேண்டும். 10 அடி அகலமும் 10 அடி நீளமுள்ள ஒரு சமையலறையும் ஒரு சாமான் வைக்கு மறையும் சட்டவேண்டும்.

2. பழைய கட்டிடத்தின் இரண்டு பழைய கதவும் நாலு யன்னல்களும் புதிய கட்டிடத்துக்குப் பாவிக்கவேண்டும்.

3. புதிய கட்டிடத்தின் நிலத்துக்குக் களிமண்போட்டுச் சாணியால் மெழுகவேண்டும், சுவர்களுக்கு வெள்ளையடிக்க வேண்டும், கதவுகள் யன்னல்களுக்கு தீந்தைபூசவேண்டும். புதிய கதவுகள் இரண்டு பாதியாகப் போடவேண்டும்.

4. சமையலறையும் சாமான்வைக்கு மறையும் பழைய கட்டிடத்தின் பழுதுபடாத மரந்தடிகளால் மண்சுவர் வைத்துக் கட்டவேண்டும்.

ஈ. ஆர். ஸட்பெரி,
உதவி ஏசண்டருக்காக.

புத்தளம்,
1924 ம் ஸ்ரீ ஆவணிமீ 3 ந் திகதி.

### சாமான்கள் கொடுக்கிறதற்குக் கேள்விப்பத்திரம்.

நார்க்கடகம், ஓலைப்பாய் ஓலைஉமல், தேங்காய்எண்ணெய் ஆமணக்கெண்ணெய், மண்ணெண்ணெய், பனைஓலை, தும்புக்கட்டு, ஈக்குக்கட்டு, கூட்டத்தடி, தும்புக்கயிறு, சாக்கு என்னும் இந்தச் சாமான்கள் கேட்குநேரமே யாழ்ப்பாணம் உப்புமால் தொண்டமனூர் உப்புக்குதம் ஆகிய இந்த விடங்களில் கொடுககிறதற்கு 1924 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 1 ந் திகதி தொடக்கம் 1925 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 30 ந் திகதி வரையில் ஒப்பந்தம் கேட்க விரும்புபவருடைய கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படும்

2. கேள்விப்பத்திரம் இணைப்பிரதியாகவும் முத்திரையிடப்பட்டதாயு மிருககவேண்டும் மூலப்பிரதி வடமாகாண ஏசன்றுத்துரை அவர்களுக்கும் இணைப்பிரதி கொழும்பு அரசிறை வருமானத்தலைவர் கந்தோருக்கும் விலாசம் போட்டிருத்தல் வேண்டும்.

3 கேள்விப்பத்திரம் கேள்விக்காரன் தானகக் கொடுக்கலாம் அல்லது தபாலில் அனுப்பலாம். இரண்டு பிரதிகளும் ஒரே நேரத்தில் அனுப்பப்படல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரத்தில் Tender for Supplying Materials, 1924–25 என்று உறையின் இடதுபக்க மேல்மூலையில் போடப்பட்டிருத்தல் வேண்டும். அப்பத்திரம் யாழ்ப்பாணக் கச்சேரியில் 1924 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 5 ந் திகதி பிற்பகல் 2 மணிககுமுன் சேரவேண்டும்.

5. கேள்விப்பத்திரம் எழுத மாதிரிக்கடதாசி யாழ்ப்பாணக கச்சேரியில் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம். அந்த மாதிரிக் கடதாசியில் எழுதாத வேறு எவ்விதப் பத்திரமும் ஏற்கப்பட மாட்டாது. மாற்றங்களுக்கு கையொப்ப முதலெழுத்துக விடப்பட வேண்டும். அல்லாவிடில் கேள்விப்பத்திரம் பிளையென விலககப்படும்.

6. கச்சேரியில் ரூபா 20 கட்டிப் பற்றுச்சீட்டு காட்டினவருக்கே மாதிரிக்கடுதாசி கொடுபடும். ஒருவருடைய ஒப்பதக் கேள்வியை ஏற்றுக்கொண்டதென்று அறிவித்தல் கொடுத்த நாள்தொடக்கம் பத்து நாளைக்குள் ஒப்பந்தம் ஏற்க பிணைகொடுக்க அல்லது உறுதிமுடிககத் தவறினுல், கட்டின காசு கவுண்மேநதுக்கு இனமாகும். அப்படித் தவறியவர் கவுண்மேந்து ஒப்பந்தக் கொடுக்கப்படாதென்று விலக்கப்பட்ட ஒப்பந்தக்காரருடைய பெயர் பதியப்படும் இடாப்பில் பதியப்படுகிறதற் காளாவார். ஒப்பந்தம் கைச்சாத்திட்டு முடிவானவுடன் மற்றக் கேள்விக்காறருடைய காசு திருப்பிக் கொடுபடும்.

7. ஒவ்வொரு கேள்விப்பத்திரத்தோடு இரண்டு தகுதியான பேர் பிணைநிற்போமென்று சம்மதம்காட்டும் பத்திரமும் அணைத்திருக்க வேண்டும். அவர்களுடைய விலாசமும் காட்டியிருக்க வேண்டும்.

8. ஒப்பந்தம் கொடுக்கும் நாளில் கொடுக்கவேண்டிய சாமான்களுக்கு மாதிரிப்பொருட்களுங் கொடுக்கவேண்டும்.

9. ஒப்பந்தத்தைச் சரியாய் ஒப்பேற்றுவதற்காகப் போதிய பிணைகாரர் பிணையுறுதிக்குச் சேரவேணும். பிணையுறுதியின் தொகையும் வேறுவித தேவையான விபரங்களும் கந்தோரில் கேட்டுக்கொள்ளலாம்.

10. அரசாட்சியாரிடம் ஒப்பந்தம் எடுத்து அவ்வொப்பந்தத்தை நிறைவேற்றத் தவறியவர்களுடைய டாப்பில் தனித்தேனும் மற்றவர்களுடன் ஒருமித்தேனும் காணப்படும் பேர்வழிகாரருடைய ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா. அன்றியும் ஒப்பந்தக்காரன் அந்த இடாப்பிலுள்ளவர்களில் யாரையாவது அல்லது வடமாகாண அரசாட்சி ஏசன்றர் தமக்குப் போதியதெனக் கண்ட நியாயங்களை எழுத்தில் கொடுத்துத் தடை நொத்தீசு கொடுப்பின் அப்படித் தடைசெய்யப்பட்டவரைத் தம் ஊழியத்தில் உபயோகிக்கப்படாது.

11. மேற்சொல்லப்பட்ட பிரமாணங்களுக்கு அமையாத யாதொரு கேள்விப்பத்திரமும் கவனிக்கப்படமாட்டாது.

12. எந்தக் கேள்விப்பத்திரத்தையும் அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்க அல்லது நியாயஞ்சொல்லாது மறுக்க முழு உருத்தும் கவுண்மேந்துக்கு உண்டு.

ஆர். வை. டெனியல்,
அரசாட்சி ஏசன்றுக்காக.

யாழ்ப்பாணக் கச்சேரி,
1924 ம் ஆண்டு ஆவணிமீ 5 ௳.

---

## 1912 ம் ஆண்டின் 8 ம் இலக்க மதுபானத்தீர்வைச் சட்டத்தின்கீழ் அறிவித்தல.

### 1925—26 ம் ஆண்டு கள்ளு தவறணைகளைப்பற்றி ஊர் சனங்களின் சம்மதி அறிவதைக்குறித்த விளம்பரம்.

மத்திய மாகாணம் மாத்தளை டிஸ்திறிக் உதவி அரசாட்சி ஏசன்றுத்துரை அவர்கள் 1922 ம் ஆண்டு ஆனிமாதம் 16 ந் திகதியையும் 130 ம் இலக்கத்தையும் கொண்ட குடிவகை விளம்பரப் பிரமாணங்களின் 5 ம் பிரமாணத்தில் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைக்கொண்டு தவறணையின் பற்றுகளில் வசிக்கும் குடிசனங்களின் தலைவரிப்பணம் கொடுப்பவர்களுள் 100 க்கு 60 பெயர் அந்த தவறணை இருக்கிற இடத்தில் இருப்பதற்கு மாறோ என்று அறிவதற்கு பின் சொல்லப்படும் திகதியையும் இடத்தையும் நியமனம் செய்திருக்கிறார் என்று இத்தால் சகலரும் அறியவேண்டியது.

1924 ம் ௵ ஆவணிமீ 26 ந் திகதி செவ்வாய்கிழமை காலமே 7 மணி தொடக்கம் பின்னேரம் 7 மணி வரைக்கும் பிலாப்பத்தை கிராமக்கோட்டில் உடுகம கள்ளுத் தவறணையைப்பற்றி நடத்தப்படும். இதைச்சேர்ந்த பற்றுக்கள் உடுகமவும் இம்புலான்டண்டவாசங்கள்.

மாத்தளைக் கச்சேரி,
1924 ம் ஆண்டு ஆவணிமீ 2 ந் தேதி.

டீ. ஏ. ஹொட்ஸன்,
உதவி அரசாட்சி ஏசன்று.

---

## வழக்குப்புத்தகங்களை அழித்தலைப்பற்றிய அறிவித்தல்.

1882 ம் ஆண்டு தொடங்கி 1887 ம் ஆண்டு வரையிலும் கொழும்பு டிஸ்திறிக்கோட்டிலுள்ள தேவையில்லாதவும் பெருத வழக்குகள் நம்பர்கள் (79 746 ல் இருந்து 79.999 வரைக்கும், 83,702 ல் இருந்து 83,999 வரைக்கும், 86,801 ல் இருந்து 90,380 வரைக்கும், 92 728 ல் இருந்து 94,500 வரைக்கும், 98,000 ல் இருந்து 98,639 வரைக்கும்; புரட்டாசிமாதம் முதலாந் தேதி முதல் மூன்று மாதங்கள் கள்ந்தவுடனே 1894 ம் ஆண்டின் 12 ம் இலக்க கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் அழித்துப்போடப்படும் என்று இத்தால் அறிவிக்கப்பட்டு இருக்கின்றன.

எந்த வழக்கிலாவது உடந்தைப்பட்டவர்கள் ஏவுதல் அல்லது பெட்டிச மூலமாகுதல் போதிய காரணங்காட்டி அவ்விதமான வழககு புஸ்த்தகங்களை அழிக்கப்படாது என்று உரித்துப்பேசலாம்.

டிஸ்திறிக் கோடு,
1924 ம் ஆண்டு ஆவணிமீ 1 ந் தேதி.

டபிள்யு எஸ். டசேரம்,
டிஸ்திறிக் நீதிபதி.

---

A. C. RICHARDS, ACTING GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.